# LEADERSHIP PROBLEMS FACED BY THE PRINCIPALS IN THE MANMUNAI WEST DIVISION TO PRODUCE EFFECTIVE SCHOOLS

LIBRARY
12 OCT 2009
Eastern University, Sri Lanka.

VALLIPURAM MURUGATHAS

Regd.No : EU/PGS/2007/MED/15

A Dissertation submitted in partial requirement of the

Degree of Master of Education

MED10
Thesis
Library - EUSL

DEPARTMENT OF EDUCATION & CHILDCARE,
FACULTY OF ARTS & CULTURE,
EASTERN UNIVERSITY,
VANTHARUMOOLAI,
CHENKALADY,
SRI LANKA.

2007 /2008

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

பாடசாலைத் தலைவர்களான அதிபர்கள் சிறந்த தலைமைத்துவப் பின்னணியுடையவர்களாக இருத்தல் பாடசாலைகளின் பயன்தருதன்மையைப் பாதிக்கும் முக்கிய காரணியாகும். இவ் அதிபர்கள் எதிர்நோக்கும் தலைமைத்துவம் சார்ந்த பிரச்சினைகள் பாடசாலைகளின் பயன்தருதன்மையை நேரடியாகப் பாதிக்கின்றன. இலங்கையில் பாடசாலைகளின் வெளியீடுகளை உவப்பான நிலைக்கு இட்டுச் செல்லுதல் என்னும் விடயத்தில் அதிபர்களின் தலைமைத்துவம் சார்ந்த பிரச்சினைகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட வாய்ப்புள்ளது.

இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முற்றிலும் கஷ்ட, அதிகஷ்ட பிரதேசப் பாடசாலைகளை உள்ளடக்கிய பிரதேசமான மண்முனை மேற்கு பிரதேசப் பாடசாலைகளின் பயன்தரு தன்மை ஒப்பீட்டளவில் தாழ் நிலையைக் கொண்டிருப்பது ஒரு கல்வி சார் பிரச்சினையாக எழுகின்றது. எனவே இப்பிரதேச பாடசாலைகளினை பயன்தரு பாடசாலைகளாக்குவதில் அதிபர்கள் எதிர்நோக்கும் தலைமைத்துவம் சார்ந்த பிரச்சினைகளை இனங்காணும் நோக்கிலேயே 'பயன்தரு பாடசாலைகளாக்குவதில் மண்முனை மேற்குக் கல்விக்கோட்டப் பிரதேசப் பாடசாலை அதிபர்கள் எதிர்நோக்கும் தலைமைத்துவம் சார் பிரச்சினைகள்' எனும் ஆய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கட்டுரை ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது.

இயல் ஒன்று ஆய்வுப்பின்னணி, பிரச்சினைக்கான நிலைமைப் பகுப்பாய்வு, ஆய்வுப்பிரதேசமும் குடித்தொகையும், ஆய்வின் பிரதான எண்ணக்கருக்கள், ஆய்வுமுறை ஒழுங்கு, ஆய்வுக்குறிக்கோள்கள், ஆய்வு வினாக்கள், ஆய்வின் பயன்பாடுகள் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாகவுள்ளது.

இயல் இரண்டு இயல் அறிமுகம், ஆய்வுடன் தொடர்புடைய இலக்கிய மீளாய்வு, தலைமைத்துவக் கோட்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது.

இயல் மூன்று இயல் அறிமுகம், அளவைநிலை ஆய்வு பற்றிய விபரம், தரவு சேகரித்தலும் அதற்கான கருவிகளும், ஆய்வு வினாக்கள், தரவுகளை ஒழுங்கமைத்தலும் சமர்ப்பித்தலும் என்கின்ற விடயங்களை உள்ளடக்கியதாகவுள்ளது.

இயல் நான்கு இயல் அறிமுகம், தரவுப்பகுப்பாய்வு என்பவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

இயல் ஐந்து இனங்காணப்பட்ட பிரச்சினைகளையும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முன்மொழிவுகளையும், எதிர்கால ஆய்விற்கான விதப்புரைகளையும், நிறைவுரையையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இவ்வாய்வானது மண்முனை மேற்குப் பிரதேசப் பாடசாலைகளின் பயன்தருதன்மையை அதிகரிப்பதற்கு அதிபர்களின் தலைமைத்துவம் சார் பிரச்சினைகளையும், தலைமைத்துவம் சார் பலவீனங்களையும் இனங்கண்டு கொண்டுள்ளதுடன் மேற்படி பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கான முன்மொழிவுகளையும் கொண்டுள்ளது.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| | உறுதியுரை | I |
| | மேற்பார்வையாளர் சான்றிதழ் | II |
| | நன்றியுரை | III-IV |
| | ஆய்வுச் சுருக்கம் | V –VI |
| | பொருளடக்கம் | VII-VIII |
| | அட்டவணைப் பட்டியல் | IX |
| | வரைபடப் பட்டியல் | X-XI |
| இயல்- 01 | அறிமுகம் | 01-07 |
| 1.1. | ஆய்வுப் பின்னணி | 01 |
| 1.2. | பிரச்சினைக்கான நிலைமைப் பகுப்பாய்வு | 03 |
| 1.3. | ஆய்வுப் பிரதேசமும் குடித்தொகையும் | 04 |
| 1.4. | ஆய்வின் பிரதான எண்ணக்கருக்கள் | 04 |
| 1.5. | ஆய்வு முறை ஒழுங்கு | 05 |
| 1.6. | ஆய்வின் குறிக்கோள்கள் | 06 |
| 1.7. | ஆய்வு வினாக்கள் | 07 |
| 1.8. | ஆய்வின் பயன்பாடுகள் | 07 |
| இயல்- 02 | இலக்கிய மீளாய்வு | 08-38 |
| 2.1. | அறிமுகம் | 08 |
| 2.2. | ஆய்வுடன் தொடர்புடைய இலக்கிய மீளாய்வு | 09 |
| | 2.2.1. பயன்தரு பாடசாலைகள் | 09 |
| | 2.2.2. பயன்தரு பாடசாலையொன்றின் இயல்புகள் | 11 |
| | 2.2.3. பாடசாலையினுடைய பயன்தரு தன்மையிலே பங்களிப்புச்செய்யும் காரணிகள் | 11 |
| | 2.2.4. பயன்தரு பாடசாலையொன்றைக் கட்டியெழுப் புவதற்கான தடைகள் | 12 |
| | 2.2.5. பயன்தரு பாடசாலைகளாக்குவதில் அதிபர்களின் தலைமைத்துவம் | 13 |
| | 2.2.6. பாடசாலை அதிபர்களின் தலைமைத்துவம் - புதிய எதிர்பார்ப்புக்கள் | 16 |
| | 2.2.7. தலைமைத்துவக் கோட்பாடுகள் | 19 |

| | | |
|---|---|---|
| இயல்- 03 | ஆய்வு முறையியல் | 39-48 |
| 3.1. | அறிமுகம் | 39 |
| 3.2. | அளவை நிலை ஆய்வு | 40 |
| 3.3. | தரவு சேகரித்தலும் அதற்கான கருவிகளும் | 41 |
| | 3.3.1. முதன்மைத் தரவுகள் | 42 |
| | 3.3.2. இரண்டாம் நிலைத்தரவுகள் | 46 |
| 3.4. | ஆய்வு வினாக்கள் | 46 |
| 3.5. | தரவுகளை ஒழுங்கமைத்தலும்,சமர்ப்பித்தலும் | 47 |
| 3.6. | ஆய்வின் மட்டுப்பாடுகள் | 47 |
| இயல்- 04 | தரவுப் பகுப்பாய்வு | 49-81 |
| 4.1. | அறிமுகம் | 49 |
| 4.2. | தரவுப் பகுப்பாய்வு | 49 |
| இயல்- 05 | இனங்காணப்பட்ட பிரச்சினைகளும் முன்மொழிவுகளும் | 82-95 |
| 5.1. | இனங்காணப்பட்ட பிரச்சினைகள் | 82 |
| 5.2. | பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முன்மொழிவுகள் | 89 |
| 5.3. | எதிர்கால ஆய்விற்கான விதப்புரைகள் | 94 |
| 5.4. | நிறைவுரை | 94 |
| உசாத்துணைகள் | | 96-98 |
| பின்னிணைப்பு | 1.அதிபருக்கான வினாக்கொத்து | 99-102 |
| | 2.உப அதிபர்/பிரதி அதிபர்/ஆசிரியர்களுக்கான வினாக்கொத்து | 103-106 |
| | 3.நேர்காணலுக்கான வினாவிபரம் | 107 |
| | 4.பாடசாலைப் பரம்பல் வரைபடம் | 108 |
| | 5.அதிபர் விபரம்-மட்டக்களப்பு வலயம் | 109-112 |